நெல்லையில் ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# போதைப் பொருளுடன் இருந்த அமைச்சரை பதவி நீக்கக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர்கள் இரா.ஆவுடையப்பன் - – மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. – ம.கிரகாம்பெல் தலைமை!

*நெல்லை, ஜூலை1-*

போதை மருந்து பயன்படுத்தியது போல் வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கக் கோரி நெல்லையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாவட்ட நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் உள்ளிட்ட தி.மு.க மாணவரணியினர் 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

நெல்லை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.மாணவர் அணி சார்பில் (29.06.2026) அன்று த.வெ.க.அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்க வலியுறுத்தி நெல்லை வண்ணார்பேட்டையில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப் பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், ஆகியோர் தலைமையில் முன்னாள் அமைச்சர் மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன் கான்,முன்னாள் எம்பி.க்கள் சா.ஞானதிரவியம்,விஜிலா சத்யானந்த், மாணவரணி மாவட்ட அமைப்பாளர்கள் மத்திய சுந்தர்,மேற்கு முத்துகிருஷ்ணன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது

ஆர்ப்பாட்டத்தில் துணை மேயர் கே.ஆர் ராஜூ, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா,மாநில நெசவாளரணி செயலாளர் பெருமாள்,

மாநில கல்வியாளர் அணி இணைச் செயலாளர் ஆலடி எழில்வாணன்,மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,முன்னாள் மேயர் பி.எம்.சரவணன்,மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன்,கிரிஜாகுமார், மாநகர துணை செயலாளர் பிரபு,மாவட்ட அவைத் தலைவர் முருகன்,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன்,மாநகர கிழக்கு பொறுப்பாளர் தினேஷ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி,ஒன்றிய செயலாளர்கள் செல்வக் கருணாநிதி,ஜோசப் பெல்சி, போர்வெல் கணேசன்,கண்ணன், சுபாஷ் தங்கபாண்டியன்,அருள்மணி,அன்பழகன் மாரியப்பன்,பகுதி பொறுப்பாளர்கள் தச்சை சுப்பிரமணியன்,துபாய் சாகுல், டாக்டர் சங்கர், இளைஞர் அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன்,மாவட்ட விவசாய தொழிலாளி அமைப்பாளர் கருப்பசாமி செல்வம்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் கனகராஜ்,சாலமோன் டேவிட்,சத்தியவாணி முத்து,மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன்,நித்திய பாளையா,அலிஷேக் மன்சூர், ரம்சான்அலி,மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் நவ்ஷாத், விவசாய அணி சுடலை கண்ணு, பல்லிக் கோட்டை செல்லத்துரை,எல்ஐசி பேச்சு முத்து,பலராமன்,கீழநத்தம் ஊராட்சி மன்ற தலைவர் அனுராதா ரவி முருகன்,மாவட்ட மகளிரணி அமைப்பாளர் மகேஸ்வரி,மாநகர அமைப்பாளர் மேரி,மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா, தேவிகா,மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காமினிதேவன்,மாநகர அமைப்பாளர் சுரேஷ்குமார்,மீனவரணி அமைப்பாளர் அருள் இளங்கோ,வழக்கறிஞர்கள் அருள்மாணிக்கம்,மணிகண்டன்டன், அன்னராஜ்.மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், வார்டு செயலாளர்கள் மாரிமுத்து,பேபி கோபால்,அந்தோணி, ஜெயின் உசேன்,காஜா முகைதீன், பாலகிருஷ்ணன், கிழக்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டி,மாநில பேச்சாளர்கள் சி.பா ராவணன், நெல்லை முத்தையா,குண்டு பாண்டியன் ஏராளமானோர் பங்கேற்றனர்.ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் சரத்குமாரை கண்டித்து கோஷம் எழுப்பினர்.ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை என்று கூறி போராட்டத்தில் ஈடுபட்ட தி.மு.க. வினரை போலீசார் கைது செய்தனர்.பின்னர் காவல் துறை வேனில் ஏற்றி வண்ணார் பேட்டையில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் தங்க வைத்தனர்.பின்னர் அனைவரும் அன்று மாலையில் (29.06.2026) விடுவிக்கப்பட்டனர்.

## தென்காசி வடக்கில் கண்டன ஆர்ப்பாட்டம்!

*தென்காசி, ஜூலை 1-*

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் போதை மருந்து விவகாரத்தில் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கக் கோரி சிவகிரியில் கண்டன ஆர்ப்பாட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் உதயகுமார்,துணை அமைப்பாளர்கள் முத்துலட்சுமி,சதீஷ், வீரமணிகண்டன்,விக்ரமணிகண்டன் இளைஞர் அணி அமைப்பாளர் ராஜராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.தடையை மீறி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 75 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன்.பரமகுரு.மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பக விநாயகம்,மாவட்ட துணை செயலாளர் மனோகரன்,ஒன்றிய செயலாளர்கள் பொன்.முத்தையா பாண்டியன்,அன்புக்கரசு,லாலா சங்கர பாண்டியன்,வெள்ளத்துரை,கடற்கரை, பெரியதுரை, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் டாக்டர். மணிகண்டன். பிச்சையா, நகர செயலாளர்கள், மு.பிரகாஷ்,அந்தோணிசாமி, நாகூர் கனி,

பேரூர் செயலாளர்கள் குருசாமி,நல்ல சிவன், கந்தவேல்,மாவட்ட கவுன்சிலர்மதி மாரிமுத்து,மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக், மாடசாமி,விக்னேஷ் ராஜா,தங்கராஜ், வழக்கறிஞர் கணேசன் உள்பட 100 க்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

இதை தொடர்ந்து தடையை மீறி போராட்டத்தில் ஈடுபட்டதாக மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ உள்பட 75 பேர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.பின்னர் அன்று (29.06.2026) மாலையில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; கரூர் சம்பவத்தில் உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரைப் பார்க்க முதலமைச்சர் விஜய் கரூர் செல்கிறாராமே! திடீர் கரிசனம் என்னவோ?

**பட்டணம் : ஆமாம் அய்யா; அ.தி.மு.க.வின் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம்.ஆர்.விஜய பாஸ்கர் எம்.எல்.ஏ. தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் இணையப் போவதாக செய்தி வந்துள்ளது. எனவே கரூர் தொகுதியில் இடைத்தேர்தல் வர வாய்ப்புள்ளதால், முதலமைச்சர் கரூர் சென்று வெள்ளோட்டம் பார்க்க நினைக்கிறாரோ என்னவோ?**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ். கலைச்செல்வன்**

**ஜூலை 1 (2018)**



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தீவிர கழகக் பணியாற்றியவர்.

தேனி மாவட்டம், காக்கில் சிக்கையன்பட்டி கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, கம்பம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## ஆட்சி வரும்.. போகும்..

# தி.மு.க. வலிமை நிலையானது!

# த.வெ.க. அரசுக்கு உணர்த்திய உடன்பிறப்புகள்!

**‘200 ரூபாய் உ.பி.க்கள்’ என்று எகத்தாளம் பேசிய விஜய்யின் விசில் ரசிகக் கூட்டத்திற்கும், த.வெ.க அரசுக்கும் சரியான பதிலடியைத் தந்துள்ளது தி.முக. மாணவரணி. “நாங்கள் இரண்டாயிரம் ஆண்டு கால ஆரிய ஒடுக்குமுறைக்கு எதிரான திராவிடத் தீப்பிழம்புகள். உங்களைப் போல ஓடி ஒளிகிற தலைவனைக் கொண்ட கூட்டமல்ல” என்பதை தி.மு.க. உடன்பிறப்புகள், ‘பவுடர்’ அமைச்சர் மீதான நடவடிக்கையை வலியுறுத்திய வலிமைமிகுந்த போராட்டத்தின் மூலமாகத் தமிழ்நாடு முழுவதும் மெய்ப்பித்துள்ளனர்.**

பேரறிஞர் அண்ணா காலத்தில் 1953ஆம் ஆண்டில் மும்முனைப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. களம் கண்டனர் கழகத்தினர். அண்ணா உள்ளிட்ட கழகத்தின் நிர்வாகிகள், போராட்டத்திற்கு முன்னதாகவே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். மூன்றாவது முனையான கல்லக்குடிப் போராட்டக் களத்தில் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்து தமிழைக் காத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவரைத் தொடர்ந்து கழகத்தின் மேலும் இரண்டு அணிகள் அங்கே களம் கண்டன. தடியடி, துப்பாக்கிச்சூடு, உயிர்ப்பலிகள் என அன்றைய காங்கிரஸ் ஆட்சியின் காவல்துறையினரின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் மாதக்கணக்கில் சிறை கண்டனர் தி.மு.க.வினர்.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த மொழிப் போராட்டத்தில், தமிழுக்காக உயிரைக் கொடையாக வழங்கிய தொண்டர்களைக் கொண்ட வரலாற்றுப் பெருமை தி.மு.கவுக்கு உண்டு. பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையை எதிர்கொண்டவர் கலைஞர். எமர்ஜென்சி எனும் ஜனநாயகத்தின் மீதான தாக்குதலை எதிர்த்து, கலைஞர் முன்னெடுத்த இந்தியாவின் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் மிசாசட்டத்தின்கீழ்சிறையையும்சித்திரவதையையும் எதிர்கொண்ட நெஞ்சுறுதி மிக்க தலைவரின் தலைமையில் இயங்குகிற இயக்கம் இது. ஈழத்தமிழர் உரிமை காக்கும் போராட்டங்களிலும், இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய சட்ட நகல் எரிப்புப் போராட்டத்திலும் கலைஞர், பேராசிரியர் உள்ளிட்ட தலைவர்களுடன் சிறை சென்றவர்தான் இன்றைய நம் கழகத் தலைவர்.

**போராட்டக் களமும் சிறைவாசமும் தி.மு.க. வினருக்கு வாழ்வின் ஒரு பகுதி. பொதுவாழ்வின் விழுப்புண்கள் வீரத்தழும்புகள். “நாங்க வீட்டைவிட்டு வெளியே வரும்போதே வாய்க்கரிசி போட்டுத்தான் வரோம்” என்று தென்சென்னை மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் மாவீரன் ஜெ.அன்பழகன் சொன்னது ஒவ்வொரு உடன்பிறப்பின் உள்ளத்து உணர்வாகும்.**

76 ஆண்டுகால வரலாறு கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறப்போர்க் களத்தில் இரண்டு நிகழ்வுகளை இங்கே குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்கும். முதல் நிகழ்வு, ஈழத்தமிழர் விவகாரத்தில் கழகம் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்காக எவ்வித அரசியல் பலனுமின்றி உண்மையாகப் பாடுபட்ட ஒரே இயக்கம் தி.மு.கழகம் மட்டும்தான். இலங்கையில் அமைதி ஏற்படுவதற்காக, 1985ஆம் ஆண்டில் பூடான் நாட்டின் தலைநகரான திம்பு நகரில் இந்தியா முன்னெடுத்த முத்தரப்பு பேச்சுவார்த்தை பலன் தரவில்லை. பேச்சுவார்த்தையின் ஒருசார்பான முடிவை இலங்கைத் தமிழர் பிரதிநிதிகள் ஏற்கவில்லை.

பேச்சுவார்த்தை முறிந்த நிலையில், சென்னையில் தங்கியிருந்த இலங்கைத் தமிழர் தலைவர்களை இந்தியாவை விட்டு வெளியேற்ற முடிவு செய்து, முதல் கட்டமாக ஆண்டன் பாலசிங்கம், சந்திரஹாசன், சத்தியேந்திரா ஆகிய மூவரையும் நாடு கடத்தும் உத்தரவைப் பிறப்பித்த ஒன்றிய அரசு, அதை மாநிலத்தை ஆட்சி செய்த எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. அரசு மூலம் நிறைவேற்றத் தொடங்கியது. மூவரும் எம்.ஜி.ஆர். அரசால் கைது செய்யப்பட்ட நிலையில், நாடு கடத்தும் முடிவைக் கண்டித்து, தி.மு.க சார்பில் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறும் என அறிவித்தார் கலைஞர்.

**தலைமைக் கழகத்தின் அறிவிப்புக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கும் இடையில் 10 மணி நேரம் மட்டுமே அவகாசம் இருந்தது. அந்த குறுகிய நேரத்திற்குள் 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் நாளன்று சென்னையில் 3 இலட்சம் பேர் திரண்ட மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தி ஒன்றிய-மாநில அரசுகளை நடுங்கச் செய்ததுடன், மூவரையும் நாடு கடத்தும் உத்தரவைத் திரும்பப் பெறாவிட்டால், இந்தியப் பிரதமருக்கு கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தை நடத்துவோம் என்று ஆர்ப்பாட்டத்தின் முடிவில் எச்சரிக்கை அறிவிப்பை கலைஞர் வெளியிட்டார்.** தமிழ்நாடு முழுவதும் ரயில் மறியல் போராட்டம் எனவும் அறிவிக்கப்பட்டது. அனைத்து ரயில்களையும் ரயில்வே நிர்வாகமே நிறுத்திவிட்டது. தி.மு.க வலிமையுடன் முன்னெடுத்த போராட்டத்தால் சந்திரஹாசன், பாலசிங்கம், சத்தியேந்திரா என்று ஒவ்வொருவர் மீதான நாடு கடத்தல் உத்தரவைத் தனித்தனியாகத் திரும்பப் பெற்றது இந்திய ஒன்றிய அரசு.

மற்றொரு நிகழ்வு, 2012ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் தேதி தி.மு.க.வால் நடத்தப்பட்ட சிறை நிரப்பும் போராட்டமாகும். அப்போது செல்வி.ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வின் அடாவடி அராஜக அரசு நடந்து கொண்டிருந்தது. தி.மு.க நிர்வாகிகள் மீது பொய்யான வழக்குகள் போடப்பட்டன. நில அபகரிப்பு வழக்கு போடுவதற்காகவே தனிச் சட்டம் கொண்டு வந்தார் ஜெயலலிதா. அத்துடன் விலைவாசி உயர்வு, மின்கட்டனம் ‘பேருந்துகட்டணம்’ பால் கட்டணம் ஆகியவை உயர்த்தப்பட்டு பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். இவற்றைக் கண்டித்து தி.மு.க. சார்பில் சிறை நிரப்பும் மறியல் போராட்டத்தை அறிவித்தார் கலைஞர்.

போராட்டத்தை முன்னெடுக்கும் பொறுப்பு அப்போதைய இளைஞரணிச் செயலாளரான இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களிடம் ஒப்படைத்தார் கலைஞர். கழகத்தின் அனைத்துத் தரப்பையும் அவர் ஒருங்கிணைத்தார். போராட்ட நாளன்று தமிழ்நாடே கருப்புசிவப்புக் கொடிக் காடாக மாறியது. தலைநகரம் சென்னையில் தளபதி தலைமையில் ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகள் மறியலில் ஈடுபட்டு கைதாகினர். மகளிரணியினரை மறியல் களத்தில் இறக்கி, அவர்களுடன் கைதானார் கனிமொழி கருணாநிதி எம்.பி. இளைஞரணியினர் பெருமளவில் கைதாகினர்.

**தலைவர் கலைஞரின் ஆணைக்கிணங்க, இன்றைய நம் கழகத் தலைவர் 2012ல் முன்னெடுத்த சிறை நிரப்பும் போராட்டத்தில் ஆண்களும் பெண்களுமாக ஒன்றரை இலட்சம் உடன்பிறப்புகள் தமிழ்நாடு முழுவதும் கைதாகினர். எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் சிறைக்குச் செல்லத் தயாராக இருக்கிறோம் என்று சொல்வது போல துணிமணி களை கைப்பெட்டிகளில் எடுத்து வந்திருந்தனர். ஆட்சியில் இல்லாவிட்டாலும், கலைஞரின் கட்டளையே ஏற்று, கழகத்தின் கடைசித் தொண்டன்கூட களம் காண்பான். சிறைக்கு அஞ்சமாட்டான் என்று அணி திரண்டு, ஜெயலலிதாவின் ஆணவத்தை நொறுக்கியது தி.மு.கழகம்.**



**கோவி.லெனின்**
தி.மு.க .தகவல்
தொழில்நுட்ப அணி
ஆலோசகர்

ஜெயலலிதா அரசாங்கம் இப்படியொரு போராட்டத்தை எதிர்பார்க்கவில்லை. மாலை நெடுநேரம் காத்திருந்தனர் போலீஸ் அதிகாரிகள். எண்ணிக்கையைக் குறைத்துக் காட்ட முயற்சித்தும், 94 ஆயிரம் பேர் கைது என்றுதான் அறிவிக்க முடிந்தது. அத்தனை பேரை எந்த சிறையில் வைப்பது? தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகள் போதாது. அனைவரையும் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

அந்த ஜெயலலிதாவை விடவும் மோசமான ஆட்சியை நடத்தி வரும் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சியில் அமைச்சராக உள்ள சரத்குமார் என்பவர் ‘பவுடர்’ பயன்படுத்தும் ரீல்ஸ் வீடியோவை அவரே பதிவிட்டிருந்த நிலையில், தவறான முன்னுதாரணமாக உள்ள அந்த அமைச்சர் மீது நடவடிக்கை கோரி தி.மு.க மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஒருநாள் இடைவெளியில், தமிழ்நாடு முழுவதும் கழக மாணவரணியினரும் கழக நிர்வாகிகளும் ஆயிரமாயிரமாய் அணி திரண்ட நிலையில், ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்தது விஜய் அரசின் காவல் துறை. எனினும், ரீல்ஸ் ஆட்சியின் அலங்கோலத்தையும் ஆபத்தையும் அதனால் தமிழ்நாடு எதிர்கொள்ளும் அவலத்தையும் முழக்கங்களாக எழுப்பினர் உடன்பிறப்புகள். அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசு, கழகத்தினரைக் கைது செய்தது. எனினும், தமிழ்நாடு முழுவதும் 29.6.2026 அன்று எழுச்சியுடன் நடந்த போராட்டத்தில் கைதான உடன்பிறப்புகளின் எண்ணிக்கையைக் கண்டுமிரண்ட விஜய் அரசு, மாலையில் விடுவித்தது.

**இடைப்பட்ட நேரத்தில், கழகத்தினர் அடைத்து வைக்கப்பட்டிருந்த மண்டபங்களில் கொள்கை முழக்கங்களை எழுப்பியதுடன், பவுடர் அமைச்சரின் செய்கையை ரீல்ஸ் வடிவில் வெளியிட்டு மக்களிடம் இந்த ஆட்சியின் அவலத்தை கொண்டு சேர்த்தனர். சிறைச்சாலையை பட்டிமன்ற கவியரங்க மேடைகளாக மாற்றிய அன்றைய தி.மு.க.வினரின் மரபு வழி தொடர்ச்சியை இதில் பார்க்க முடிந்தது.**

ஆட்சி வரும்.. போகும்.. தி.மு.க.வினரின் கொள்கை உணர்வும் கழகத்தின் வலிமையும் நிலையானது என்பதை மாணவரணி முன்னெடுத்த கழகத்தினரின் ஆர்ப்பாட்டம் த.வெ.க. அரசுக்கு உணர்த்தியிருக்கிறது.

# தமிழ்நாட்டு அரசியல் வீழ்ச்சி: தரமிழக்கும் சட்டமன்றம், தடுமாறும் பொதுமன்றம், தறிகெட்டுச் செல்லும் த.வெ.க. ஆட்சி அலங்கோலங்கள்!

கடந்த ஐந்தாண்டுகளாக டில்லி உள்ளிட்ட இந்திய பெருநகரங்களில், முற்போக்கான, முதிர்ச்சியுள்ள அரசியல் பார்வையாளர்களிடையே, ஊக்கமிக்க இளைஞர்களிடையே பேசும்போது தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைப் பார்த்து அவர்கள் கூறும் வசனம் ஒன்று இருந்தது: “உங்களுக்கு என்ன, ஸ்டாலின் இருக்கிறார்!” என்பதுதான் அது.

ஏனெனில் ஒன்றிய அரசிலும் சரி, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலும் சரி நடக்கும் அரசியல் நாகரீகமற்ற, பண்பாட்டு முதுற்சியற்ற, நெறிகளுக்கு புறம்பான செயல்களை பார்க்கும்போதெல்லாம் தமிழ்நாட்டில் நடக்கும் தி.மு.க. ஆட்சி உண்மையிலேயே அவர்களுக்கு ஏக்கப் பெருமூச்சை வரவழைப்பதாக இருந்தது. ஸ்டாலின் ஆட்சியில் தமிழ்நாட்டு அரசு மக்களாட்சியின் மாண்பை உயர்த்துவதாக இருந்தது. மக்கள் நலத்திட்டங்களும், பொருளாதார வளர்ச்சியும், கல்வி, அறிவுப்புல மறுமலர்ச்சியும் இணைந்து நடப்பதாக இருந்தது. அதனால்தான் பிற மாநிலங்களில் உள்ள முற்போக்காளர்கள் தமிழ்நாட்டை முன்மாதிரியாகப் பார்த்தார்கள். பா.ஜ.க. வெறுப்பரசியல் அலையை தடுக்கும் அரணாகப் பார்த்தார்கள்.


அதற்கு முற்றிலும் மாறாக மற்றொரு சாரார் எப்போதும் இருப்பார்கள். அது “இந்து இந்தி இந்தியா” என்ற கருத்தியலை ஏற்கும் அணி. பார்ப்பனபனியா மேலாதிக்கத்தினை உயர்த்திப் பிடிக்கும் அணி. பல்வேறு கட்சிகளிலும் இதற்கான ஆட்கள் இருப்பார்கள். தி.மு.க. என்றுமே ஆபத்து; நெருப்பு. நெருப்பை அணைக்க வேண்டுமானால் சாக்கடை ஜலத்தைக் கூட எடுத்து வீசலாம் என்பதுதான் அவர்கள் கொள்கை. ராகுல் காந்திக்கும், விஜய்க்கும் பாலமாக இருக்கும் பிரவீன் சக்ரவர்த்தியின் நேர்காணலை துக்ளக் பத்திரிகை வெளியிட்டிருப்பதைக் காணலாம்.

**சங்கிகளின் செயல்முறை தி.மு.க.விற்கு எதிராக மக்களிடையே ஓயாமல் வதந்திகளைப் பரப்புவதுதான். அது இந்து மதத்திற்கு எதிரானது என்பார்கள்; கோயில்களை இடிக்கிறார்கள் என்பார்கள்; இந்திய ஒற்றுமைக்கு எதிரானது என்பார்கள்; ஊழல் தலைவிரித்து ஆடுகிறது என்று பெரும் கட்டுக்கதைகளை பரப்புவார்கள்; தி.மு.க. தலித் சமூகத்தினருக்கு எதிரானது. அவர்களுக்கு எதுவும் செய்யவில்லை என்று ஒரு சாரார் ஒரு தலைபட்சமான கருத்துக்களை பிரச்சாரம் செய்வார்கள். மற்றும் சிலர் தமிழ் தேசியத்தை வீணாக்கிவிட்டது என்று சொல்லி பிளவுவாத சிந்தனைகளைத் தூண்டுவார்கள். இவை எல்லாவற்றிற்கும் இந்திய பெருந்தேசிய நல்லாசி கிடைக்கும். எப்படியாவது தி.மு.க. ஆட்சி தொடரக்கூடாது. அந்த கட்சி பலவீனமடைய வேண்டும். அரசியலில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதே அவர்களது ஒரே நோக்கமாக இருக்கும்.**

வெகுஜன மனநிலை என்பது எப்போதுமே பிளவுபட்டது. அது ஒரு வகையில் என்னதான் ஏற்றத்தாழ்வு இருந்தாலும், நிலைபட்ட சமூக அமைப்பின் பாதுகாப்பை விரும்பக்கூடிய பிற்போக்கு மன நிலை இருக்கும். சமூக மாற்றம் வேண்டும் என்று நினைக்கும்; ஆனால் நிலைத்தன்மைக்கும் ஏங்கும். அதுதான் தி.மு.க. எதிர்ப்பாளர்களின் பெரும்பலம். தி.மு.க. அரசியல் என்றுமே எதிர்நீச்சல் அரசியலாக இருக்க வேண்டிய சூழ்நிலை.

இதை நன்றாகப் புரிந்த தி.மு.க. எதிர்ப்பு அரசியல் தலைவர்கள் முதல் வேலையாக மாங்காடு, மூகாம்பிகை என்று கோயில்களுக்கு செல்வார்கள். அது பக்தி என்று கூறப்படும்; ஆனால் மக்கள் அதை பிற்போக்கு நிலைத்தன்மையின் குறியீடாக புரிந்துகொள்வார்கள். காலம் காலமாக, தெய்வங்கள், பூசாரி வர்க்கம், மன்னர்கள் என்ற அரசமைப்பு உளவியலின் தொடர்ச்சி, பழமைவாத ஏக்கம் இதில் செயல்படுவது தி.மு.க. எதிர்ப்புக்கு வலுச்சேர்க்கும்.

**அரை நூற்றாண்டுக்காலம் தி.மு.க.வை வழிநடத்திய கலைஞர் வைணவ சீலர் ராமானுஜர் வாழ்க்கை வரலாற்றினையே தொலைகாட்சித்**




**தொடராக எழுதி, அவரது ஜாதி வேற்றுமைக்கு எதிரான முற்போக்கு சிந்தனையை பாராட்டினாலும் தனிப்பட்ட முறையில் மத வழிபாட்டை மேற்கொண்டதில்லை. அந்த வழியிலேயே ஸ்டாலினும் பயணிக்கிறார். இந்த தலைமைப் பண்பு இந்துத்துவ கருத்தியல் மேலாதிக்கத்திற்கு எதிரான சமரசமற்ற நிலைபாட்டை உணர்த்துவதாக இருக்கிறது. தனிப்பட்ட கடவுள் பக்தி வேறு, மத அடையாளவாதம் வேறு என்றாலும், தலைவர்கள் பகுத்தறிவு சார்ந்தவர்களாக இருப்பது பொதுவெளியில் மதச்சார்பின்மையை வலுப்படுத்துகிறது.**

இவையெல்லாம் இணைந்துதான் திடீரென நடிகர் விஜய் 107 தொகுதிகளில் நிறுத்திய திடீர், குபீர் வேட்பாளர்கள் அவர் முகத்தால் வெற்றி பெற்று, இப்போது ஒரு கூட்டணி அரசொன்று அமைந்துள்ளது. பெரும்பான்மை இல்லாததால் ஆட்சி அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டு ஆளுனர் ஆட்சி என்ற மறைமுக பா.ஜ.க. ஆட்சி ஏற்பட்டு விடக்கூடாது என்று சொல்லி தி.மு.க கூட்டணியில் போட்டியிட்ட காங்கிரஸ், வி.சி.க, முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகள் இப்போது த.வெ.க அமைச்சரவையில் பங்கேற்றுள்ளன. இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகளும் வெளியிலிருந்து ஆதரவு தருகின்றன. ம.தி.மு.க. தலைவர் வைகோவும் விஜயை சந்தித்துப் பேசி விட்டு, தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகியுள்ளார்.

இந்த சூழ்நிலையில் இரண்டு முக்கியமான கேள்விகள் எழுகின்றன. **ஒன்று, விஜய் உண்மையிலேயே பா.ஜ.க. எதிர்ப்பாளர் என்று கருதி தி.மு.க. தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்ற கட்சிகள் விஜய் அரசின் அலங்கோலங்கள் மீதான விமர்சனங்களுக்கு பொதுமன்றத்தில் தடுப்பரண் அமைத்து செயல்படுவது சரியா? இரண்டு, ஆளுனர் ஆட்சி வரக்கூடாது என்பதற்காக விஜய் அரசு தமிழ்நாட்டு நலன்களை சீர்குலைப்பதை வேடிக்கை பார்க்க முடியுமா?**

**விஜயின் பா.ஜ.க. எதிர்ப்பின் போலித்தனம்!**

ஜோசப் விஜய் பா.ஜ.க. ஆதரவாளர் கிடையாது என்று பலரும் கருதுகிறார்கள். காங்கிரஸ் கட்சியை அமைச்சரவையில் இணைத்துள்ளார், ராகுல் காந்தியை பதவியேற்பு விழாவிற்கு அழைத்தார், கம்யூனிஸ்டு கட்சி அலுவலகங்களுக்குச் சென்று ஆதரவு கேட்டார், ஏன் பெரியார் திடலுக்குக் கூடச் சென்றார் ஆகியவை காரணங்கள். ஆனால் காங்கிரஸ், தி.மு.க. பிரிவது பா.ஜ.க.விற்கு எவ்வளவு பெரிய ஆதாயம் என்பதை யாரும் பேசுவதில்லை. இந்தியா கூட்டணியில் கடுமையான சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 2029 தேர்தலிலும் பா.ஜ.க. ஆட்சியிலிருந்து அகற்றப்பட வேண்டுமானால் காங்கிரஸும், மாநில கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட்டால்தான் இயலும். அவ்வாறாக செயல்பட காங்கிரஸ் மீது மாநில கட்சிகள் நம்பிக்கை வைக்கவேண்டும். தி.மு.க.வுடன் கூட்டணியமைத்து போட்டியிட்டுவிட்டு த.வெ.க. ஆதரவாக மாறியுள்ளது காங்கிரஸின் நம்பகத்தன்மையை பெருமளவு பாதித்துள்ளது. அதன் மூலம் பா.ஜ.க.விற்கு பெரியதொரு நன்மையை செய்துள்ளார் விஜய்.

த.வெ.க. காங்கிரஸ் கூட்டணி உண்மையிலேயே காங்கிரஸை பலப்படுத்தும் என்றால் பா.ஜ.க. எவ்வளவு பதட்டம் அடைந்திருக்க வேண்டும்? எங்களுக்கு 2026 சட்டமன்றத் தேர்தல் முக்கியமல்ல, 2029 நாடாளுமன்றத் தேர்தல்தான் முக்கியம் என்று அறிவித்த பா.ஜ.க. எதனால் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறது? ஐந்தாண்டுகளாக இல்லாத அதிசயமாக ஆளுனர் ஏன் முழு ஒத்துழைப்புத் தந்து சட்டமன்றத்தில் உரை நிகழ்த்துகிறார்? ஏன் வி.சி.க. அமைச்சர் வன்னி அரசு பா.ஜ.க.வை விமர்சித்துப் பேசும்போது அவைத்தலைவர் அவசரமாகக் குறுக்கிடுகிறார்? கொள்கை எதிரி, பாசிச பா.ஜ.க.வை விமர்சித்தால் என்ன?

**இதற்கெல்லாம் பின்னணியில் ஒரு விடை தெரியாத கேள்வி இருக்கிறது. சி.பி.ஐ. கரூர் நெரிசல் மரணம் குறித்த விசாரணையில் என்ன செய்து கொண்டிருக்கிறது? ஏன் தேர்தலுக்கு முன் இரண்டு முறை விஜய் டில்லிக்கு அழைக்கப்பட்டார்? ஏன் இரண்டாவது முறை சி.பி.ஐ அலுவலக வளாகத்திலிருந்தே வெற்றிக் குறி காட்டியபடி பவனிவர அனுமதிக்கப்பட்டார்? அந்த விசாரணையின் முடிவுகள் ஏன் இன்னும் வெளியாகவில்லை? இன்னும் எத்தனை மாதங்கள் அதற்குத் தேவை? அந்த விசாரணையைக் கண்காணிக்க அமர்த்தப்பட்ட ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி என்ன செய்கிறார்? இறந்துபோன அந்த 41 உயிர்களுக்கு நியாயம் வழங்குவது யார்? மக்கள் பொது இடங்களில் பா.ஜ.க. விஜயை கட்டுப்படுத்த அந்த விசாரணையை பயன்படுத்துகிறது என்று பேசுகிறார்கள். இதுதான் சட்டத்தின் ஆட்சியா?**

விஜய் எந்த பிரச்சினை குறித்தும் பொதுவெளியில் பேசாமல், அறிக்கைகள் விடாமல் இருப்பதன் மர்மம் என்ன? ஊடகங்களை ஏன் சந்திப்பதில்லை? கொள்கை எதிரி குறித்து எதுவுமே பேசாமல் எப்படி தன் கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்வதில் வெற்றி பெறுவார்? கொள்கை எதிரிகள் தொடர்ந்து பிரச்சாரம் செய்கிறார்களே? அது குறித்து அவருக்கு கவலை இல்லையா?

**ராஜன் குறை கிருஷ்ணன்**
பேராசிரியர், அம்பேத்கர் பல்கலைக்கழகம், புதுதில்லி



ஒரு யூடியூப் சேனலில் ராகுல் காந்தி ஜோசப் விஜய் இணைப்புப் பாலம் பிரவீன் சக்ரவர்த்தியின் நேர்காணல் ஒன்று மிகவும் சுவாரசியமாக இருக்கும். அது வடிவேலு நடித்த ஒரு நகைச்சுவைக் காட்சியை நினைவுபடுத்துவதாக இருக்கும். அந்த காட்சியில் போலீஸால் துரத்தப்படும் திருடன் ஒருவன் வடிவேலுவிடம் “என்னை போலீஸ் துரத்திக்கொண்டு வருகிறார்கள். நான் உங்களிடம் என்ன சொன்னேன் என்று கேட்பார்கள். ஒன்னும் சொல்லீடாதீங்க” என்று கூறிவிட்டு ஆற்றில் குதித்துவிடுவான். போலீஸ் வடிவேலுவிடம் அவன் என்ன சொன்னான் என்று கேட்கும் போது வடிவேலு அவன் சொன்னதைக் கூறுவார். போலீஸ் அவன் சொன்னதைக் கேட்காதே, அவன் என்ன சொன்னான் என்று சொல் என்று கேட்பார்கள். வடிவேலு அவன் அதைத்தான் சார் சொன்னான் என்று கூறுவார். போலீஸ் என்னத்தை சொல்லிடாதீங்க என்று சொன்னான் அதைச்சொல் என்று கேட்பார்கள். வடிவேலு மீண்டும் மீண்டும் சொல்லிடாதீங்க என்றுதான் சொன்னான் என்று சொல்லி அடிவாங்குவார்.

அதுபோல, நேர்காணல் செய்பவர் பிரவீன் சக்ரவர்த்தியிடம் பா.ஜ.க. கொள்கை எதிரி என்று அவர் எப்படி சொல்கிறார் என்று கேட்பார். பிரவீன் சக்ரவர்த்தி அவர்தான் சொல்கிறாரே என்று சொல்வார். சரி, நீங்கள் அதை எப்படி ஏற்றுக்கொள்கிறீர்கள் என்று கேட்பார். பிரவீன் சலிக்காமல், அவர்தான் கொள்கை எதிரி என்று சொல்லிவிட்டாரே என்பார். அதை எப்படி நம்புகிறீர்கள் என்றால் மக்களைக் கேளுங்கள், விஜயின் கொள்கை எதிரி யாரென்று, அவர்கள் சொல்வார்கள் என்பார். சரி, நீங்கள் எப்படி சொல்கிறீர்கள் என்றால் நான் எப்படி சொல்லமுடியும் அவர் சொல்கிறார், மக்கள் சொல்கிறார்கள் என்பார். உண்மையிலேயே வடிவேலு காமெடி போல சிரிப்பாக இருக்கும்.

ஜோசப் விஜய் பா.ஜ.க. தன்னுடைய கொள்கை எதிரி என்று சொன்னதால் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த சில கட்சிகள் அவரை ஆதரிக்கின்றன. அவர் ஆட்சிக்கு ஆதரவளிக்கின்றன. அவர்கள் ஆதரவு அளிப்பதுதான் அவர் பா.ஜ.க.வின் கொள்கை எதிரி என்பதற்கு ஆதாரம். மற்றபடி அவர் நெற்றியில் பொட்டு, தோளில் கோட்டு என்று சபையை அலங்கரித்தால் போதும் என்பதுதான் புரிதலாக இருக்கிறது.

**த.வெ.க. ஆட்சி அலங்கோலங்கள்!**

ஆளுனர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய முதல்வர், எதிர்கட்சிகளின் கேள்விகளுக்கு முறையாகப் பதில் சொல்லாமல் ஏதேதோ பேசிவிட்டு இறுதியில் நான் ஒரு சைகை செய்யட்டுமா என்று கேட்கிறார். அவைத்தலைவர் “செய்யுங்கள் பிரபுவே!” என்ற வகையில் விநயமாக அனுமதிக்கிறார். உடனே ஏதோ கழுத்தை அறுப்பதுபோல ஒரு சைகை செய்கிறார். எல்லோரும் சிரிக்கிறார்கள். எட்டு கோடி பேர் வாழும், உலகின் பண்டைய பண்பாட்டைக் கொண்ட மக்களின் சட்டமன்றத்தில் முதல்வர் செய்யும் செயலா இது என்று யாரும் கேட்பதில்லை!

**அடுத்த முறை முதல்வர் நடனமாடவா என்று கேட்டாலும் கேட்கலாம். ஏற்கனவே அமைச்சர்கள் பள்ளிகளில் குத்தாட்டம் போட்டு ஆட்சியின் மேன்மையை வெளிப்படுத்தி வருகிறார்கள். அவர்களும் சேர்ந்து சட்டமன்றத்தில் ஆடலாம்.**

**தலைநகர் டில்லியில் தமிழ்நாட்டு அரசின் சிறப்புப் பிரதிநிதியாக விஜய் நடித்து சென்சாரால் முடக்கப்பட்ட ஜனநாயகன் படத்தைத் தயாரித்த வெங்கட் நாராயணா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இதுவரை அரசு நிர்வாகத்துடனோ, அரசியலுடனோ எந்த தொடர்பும் கிடையாது. தனியார் கம்பெனிகளை நட த்தியுள்ளார். இப்போது ரியல் எஸ்டேட், திரைப்பட தயாரிப்பு ஆகியவற்றில் ஈடுபடும் கம்பெனியை நடத்தி வருகிறார். ஆந்திராவைச் சேர்ந்த இவர் பெங்களூருவில் வசித்து வருகிறார்.** இவர் எந்த அடிப்படையில் தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாக, அமைச்சர்களுக்கு இணையான அந்தஸ்த்துடன் இயங்க நியமிக்கப்படுகிறார் என்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே அவருடைய மேலாளராக அவருடைய படங்களில் பணிபுரிந்தவரும், தேர்தல் பிரசாரத்திற்காக ரூட் என்ற அமைப்பை நடத்திய வருமான ஜெகதீஷ் பழனிசாமி அவருடைய தனி உதவியாளராக அரசால் நியமிக்கப்பட்டுள்ள செய்தி வெளியாகியுள்ளது. இப்படி திரைத்துறையில் தன்னுடன் பணியாற்றியவர்களையே முக்கிய பொறுப்புகளில் அமர்த்துவது அரசு நிர்வாகத்தை நடத்த எப்படி உதவும் என்ற கேள்வி எழுந்துள்ளது. தனி உதவியாளராவது அவருடைய தனிப்பட்ட பிரச்சினை. ஆனால் அரசின் பிரதிநிதியாக டில்லியில் எப்படி அவருடைய திரைப்பட தயாரிப்பாளர் செயல்பட முடியும் என்பது பெரும் வியப்பளிக்கிறது.

**இன்னொரு அமைச்சர் சரத்குமார் ஐயத்திற்குரிய விதத்தில் செல்பேசியில் கிரெடிட் கார்டால் வெள்ளைப் பொடி ஒன்றை திரட்டி ஐநூறு ரூபாய்த் தாளில் சேர்த்தும் காணொலி ஒன்று சமூக வலைத் தளங்களில் பரவலாகியுள்ளது. அது போதைப்பொருள் என்று பலராலும் கூறப்படுகிறது.** சர்ச்சை இப்போது தொலைகாட்சியிலும் பேசுபொருளாகியுள்ளது. அந்த வீடியோவை அவரே “தக் லைஃப்” என்ற தலைப்புடன் நண்பர்களுக்குப் பகிர்ந்ததாகக் கூறப்படுகிறது. இந்த சர்ச்சை வெடித்ததை அடுத்து அவர் குழந்தைக்கு மாத்திரை பொடி செய்து கொடுத்ததாக விளக்கமளித்துள்ளார். ஆனால் மாத்திரையை அப்படி பொடிப்பார்களா, அதற்கு ஏன் தக் லைஃப் என்று பெயர் கொடுக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பப் படுகிறது. ஏற்கனவே வேறு சில அமைச்சர்கள் குடியுடன் தொடர்புபடுத்திய சர்ச்சைகள் எழுந்துள்ளன.

புதிய அமைச்சரவைதானே, சில பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்யும். சிறிது அவகாசம் கொடுக்க வேண்டும் என்று பலரால் கூறப்படுகிறது. இந்த அலங்கோலங்களுக்கெல்லாம் மூல காரணம் ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால் முதல்வர் விஜயின் மௌன விரதம். மக்கள் அவரை நம்பித்தான் வாக்களித்தார்கள். அவரே அப்படித்தான் பிரச்சாரம் செய்தார். எல்லா தொகுதிகளிலும் நான் தான் போட்டியிடுகிறேன் என்றார். இப்போது மக்கள் அமைச்சர்களைக் குறித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்து கேள்வி எழுப்பும்போது அவர் மௌனம் காக்கிறார்.

வெங்கட் நாராயணாவை ஏன் மாநிலப் பிரதிநிதியாக நியமிக்கிறேன் என்று முதல்வர் விளக்கமளிக்க வேண்டாமா? அவருக்கு அவ்வாறு நியமிக்க அதிகாரம் இருக்கிறது, உரிமை இருக்கிறதா என்றால் அதனை மக்களுக்கு விளக்கச் சொல்லும் கடமையும் இருக்கிறது அல்லவா? இன்றுவரை தமிழ்நாட்டில் மக்களாட்சிதானே தொடர்கிறது. இன்னும் மன்னராட்சி ஆகவில்லையே.

ஒவ்வொரு நாளும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் வெடித்த வண்ணம் இருக்கின்றன. **பள்ளி மாணவர்களுக்கு ஜாதி அடையாளத்துடன் கூடிய அட்டைகள் வழங்கப்படும்** என்று செங்கோட்டையன் கூறுகிறார். மூத்த அரசியல்வாதியான அவருக்கு இதில் அடங்கியுள்ள பிரச்சினை தெரியாதா. ஜாதி அடையாளம் சில சமூக நீதி சார்ந்த முன்னுரிமைகளுக்கு தேவைதான். ஆனால் அதற்காக அனைவர் அடையாள அட்டையிலும் அதனை பொறிப்பது எப்படி சரியாக இருக்கும்?

**மற்றொருபுறம் முஸ்லீம்களுக்கான பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் உள்ள உள் இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட வேண்டும்** என்று உயர்நீதிமன்ற தீர்ப்பு கூறியுள்ளது. இது குறித்து அரசின் நிலைபாடு என்ன என்று முதல்வர் அறிவிக்கவில்லை. அரசு மேல்முறையீடு செய்யும் என்று தெரிகிறது. ஆனால் முதல்வர் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்துவது அவசியம் இல்லையா? எவ்வளவு முக்கியமான பிரச்சினையானாலும் மௌனம் மட்டும்தான் அவருடையே எதிர்வினை என்பது அரசின் நம்பகத்தன்மையையே குலைக்கிறது.

**பா.ஜ.க.வை விஜய் எதிர்க்கிறார் என்ற நம்பிக்கையில் அவரை ஆதரிக்கும் கட்சிகள், அவருடைய அரசின் அலங்கோலங்களை கண்டிக்க முன்வர வேண்டாமா? அந்த கட்சிகளின் ஆதரவை நம்பாமல்தானே அவர் அ.இ.அ.தி.மு.க., ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களிடம் பதவி விலகச் சொல்லி பேசி வருகிறார்? எப்படியாவது இடைத்தேர்தல்கள் மூலம் தனிப் பெரும்பான்மை அடைந்துவிட்டால் பிறகு முற்போக்கு சக்திகள் பேச்சினைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்றுதானே அவர் இயங்குகிறார்? எந்த நம்பிக்கையில் அல்லது கனவில் அவர் செயல்பாடுகளை ஆதரித்து தடுப்பரண் அமைக்கின்றன மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இருந்த கட்சிகள்? இந்த மர்மம்தான் மக்களைக் குழப்புகிறது.**

**நன்றி: மின்னம்பலம் இணைய தளம்**




சிவகங்கை மாவட்ட மாணவரணி சார்பில் கழகத் தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின்படி போதைப்பொருளை பொது வழியில் பயன்படுத்திய அமைச்சர் சரத்குமார் பதவி விலகக் கோரிசிவகங்கையில் தடையைமீறி நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார், முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன்கென்னடி, தேவகோட்டை நகர் கழகச் செயலாளர் பெரி.பாலா, ஒன்றியச் செயலாளர்கள் நாகனிரவி,வே.பூபாலசிங்கம், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துகுமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.எம்.பொற்கோ ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.



கடலூர் மாவட்டம் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி வேப்பூர் அரசு வட்டார மருத்துவமனையை விருத்தாசலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் ஆய்வு செய்தார். உடன் தே.மு.தி.க. கழகத்தைச் சார்ந்த கடலூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சிவக்கொழுந்து, நல்லூர் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பச்சமுத்து, சேகர் மற்றும் நல்லூர் வடக்கு ஒன்றிய தி.மு.கழக இளைஞரணி துணை அமைப்பாளர் வேப்பூர் முரசொலி முகவர் வ.குணசேகரன் உள்ளனர்.